சுருக்கம்

சமூக நீதித் துறை – பழங்குடியினர் மேம்பாடு – 2026-2027 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு அமைச்சர்(சமூக நீதி) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – "சமூக நீதித்துறையின் கீழ் செயல்படும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்படும் உதவித்தொகை மறுசீரமைத்து உயர்த்தப்படும்" – தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் ஆகிய வாரியங்களில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை ஒருங்கே (Uniform) அமைத்தல் – இவ்வாரியங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் விபத்து மரணம், இயற்கை மரணம் மற்றும் கல்வி உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவித்தொகைகளை இணையாக உயர்த்தி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நீதித்(ப.மே-1(2)துறை

அரசாணை(நிலை)எண். 55

நாள்: 28.08.2026
பராபவ வருடம்
ஆவணி மாதம் 11 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2057

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.48, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத்(ப.மே.1)துறை, நாள்/ 20.04.2007.
2. அரசாணை (நிலை) எண்.33, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே.1)துறை, நாள். 20.03.2008.
3. அரசாணை (நிலை) எண்.60, பி.மி.பி.(ம)சி.நலத்துறை, நாள்.27.05.2008.
4. அரசாணை (நிலை) எண்.114, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6)துறை, நாள். 15.10.2009.
5. அரசாணை (நிலை) எண்.15, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6)துறை, நாள்.19.02.2010.

****

ஆணை:-

2026-2027 ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு (வரிசை எண்.27) வெளியிடப்பட்டது.

"சமூக நீதித்துறையின் கீழ் செயல்படும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்படும் உதவித்தொகை மறுசீரமைத்து உயர்த்தப்படும்"

(த.பி.பா)

2. மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்பட்டு, பழங்குடியினர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளுக்கான தொகை நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் அமைக்கப்பட்டு, இவ்வாரியத்தின் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளுக்கான தொகை நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டு, இவ்வாரியத்தின் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளுக்கான தொகை நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

5. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் ஆகிய வாரியங்களில் வழங்கப்படும் நலத்திட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்.	**நலத்திட்டங்கள்**	**தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் தொகை (ரூபாய்)**	**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் தொகை (ரூபாய்)**	**தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மூலம் வழங்கப்படும் தொகை (ரூபாய்)**
1.	(அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை	1,25,000	1,00,000	5,00,000
	(ஆ) விபத்து ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப	10,000/- முதல் 1,00,000 /- வரை	10,000/- முதல் 1,00,000 /- வரை	1,00,000
3.	இயற்கையான மரண உதவித்தொகை	30,000	20,000	20,000
4.	ஈமச்சடங்கு உதவித்தொகை	5,000	5,000	5,000
5.	**கல்வி உதவித் தொகை**			
	1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும்			

	மாணாக்கர்க்கு (மாதம் ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு)	---	500	---
	6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்க்கு	1,000	1000	---
	(அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)	1,000	1,000	1,000
	(ஆ) 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்	1,000	1,000	1,000
	(இ) 11ம் வகுப்பு படித்து வரும் பெண்களுக்கு மட்டும்)	1,000	1,000	1,000
	(ஈ) 12 ம் வகுப்பு படித்து வரும் (பெண்களுக்கு மட்டும்)	1,500	1,500	1,500
	(உ) 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்	1,500	1,500	1,500
	(அ) முறையான பட்டப்படிப்பிற்கு	1,500	1,500	1,500
	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு	1,750	1,750	1,750
	(அ) முறையான பட்ட மேற்படிப்பிற்கு	4,000	2,000	4,000
	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு	5,000	3,000	5,000
	(அ) தொழிற்கல்வி பட்டப் படிப்பு	4,000	2,000	4,000
	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பு	6,000	4,000	6,000

(த.பி.பா)

	(அ) தொழிற்கல்விப் பட்ட மேற்படிப்பிற்கு	6,000	4,000	6,000
	(ஆ)மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	8,000	6,000	8,000
	(அ) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு	1,000	1,000	1,000
	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு	1,200	1,200	1,200
6.	**திருமண உதவி**			
	ஆண்	3,000	3,000	3,000
	பெண்	5,000	5,000	5,000
7.	(அ).மகப்பேறு உதவி மாதம் 1-க்கு 1,000	6,000	6,000	6,000
	(ஆ). கருச்சிதைவு / கருக்கலைப்பு	3,000	3,000	3,000
8.	மூக்கு கண்ணாடி செலவு தொகையை ஈடுசெய்தல்	500 வரை	500 வரை	500 வரை
9.	முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும்	1,000	1,000	1,000
10.	தொழில் தொடங்க மானியம் (i)தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம்	---	7,500	---
	(ii) குழுவாகத் தொழில் தொடங்க மானியம்	---	10,000 தனி நபருக்கு (அல்லது) குழுவிற்கு 1,25,000 அதிக பட்சமாக	---

6. மேற்கண்ட நல வாரியங்களில் வழங்கப்படும் விபத்து மரணம், இயற்கை மரணம் மற்றும் கல்வி உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிக்கான தொகைகளில் உள்ள வித்தியாசத்தை தவிர்த்து ஒருங்கே (Uniform) அமைப்பது அவசியமாகிறது. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்தில் விபத்தினால் மரணம் ஏற்பட்டால், உதவித் தொகையாக ரூ.5,00,000/- வழங்கப்படுகிறது. அதேபோன்று தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்திலும், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்திலும் விபத்தினால் மரணம் ஏற்பட்டால், உதவித்தொகையை ரூ.5,00,000/- ஆக உயர்த்தலாம் என்றும், தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தில், இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.30,000/- வழங்கப்படுகிறது. அதேபோன்று தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்திலும், தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்திலும் இயற்கை மரண உதவித்தொகையை ரூ.30,000/- ஆக உயர்த்தலாம் என்றும், தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம். தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம், மற்றும் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் ஆகிய வாரியங்களில் வழங்கப்படும் கல்வி உதவித்தொகையை இணையாக உயர்த்தலாம் என்றும் கருதப்பட்டது.

7, இந்நிலையில், மேற்காணும் கருத்துருவின் அடிப்படையில், 2026-2027 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் ஆகிய வாரியங்களில் தற்போது வழங்கப்படும் விபத்து மரணம், இயற்கை மரணம் மற்றும் கல்வி உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவித்தொகைகளை ஒருங்கே (Uniform) அமைக்கும் வகையில், இவ்வாரியங்களின் நலத்திட்ட உதவித் தொகைகளை கீழ்க்கண்டவாறு இணையாக உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

வ. எண்.	நலத்திட்டங்கள்	தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை (ரூபாய்)	தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்திற்கு தற்போது உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூபாய்)
1.	(அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை	1,25,000	5,00,000

(த.பி.பா)

2.	1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்க்கு (மாதம் ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு)	---	500

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

வ. எண்.	நலத்திட்டங்கள்	தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை (ரூபாய்)	தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்திற்கு தற்போது உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூபாய்)
1.	(அ). விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை	1,00,000	5,00,000
2,	இயற்கையான மரண உதவித் தொகை	20,000/-	30,000
3.	(அ) முறையான பட்ட மேற்படிப்பிற்கு	2,000	4,000
4.	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு	3,000	5,000
5.	(அ) தொழிற்கல்வி பட்டப்படிப்பு	2,000	4,000
6.	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பு	4,000	6,000
7	(அ) தொழிற்கல்விப் பட்ட மேற்படிப்பிற்கு	4,000	6,000
8.	(ஆ) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	6,000	8,000

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்

வ. எண்.	நலத்திட்டங்கள்	தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை (ரூபாய்)	தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்திற்கு தற்போது உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூபாய்)
1.	இயற்கையான மரண உதவித்தொகை	20,000	30,000/-
2.	1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்க்கு (மாதம் ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு)	---	500
3.	6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்க்கு	---	1000

8. இந்நலத்திட்ட உதவித்தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை இவ்வாரியத்தின் பொது வைப்பு கணக்கில் ஒப்பளிக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

என். சுப்பையன்,
அரசுசெயலாளர்.

பெறுநர்:

இயக்குநர்,ஆதிதிராவிடர் நலம், சென்னை – 600 005
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 600 005
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 600 018.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் பழங்குடியினர்
நல அலுவலர் / திட்ட அலுவலர்
(இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் /பழங்குடியினர் நலம் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 018/35.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 009.

நகல்:

நிதி (ஆதி(ம)பந)/வரவு செலவு) துறை, சென்னை -600 009.

சமூக நீதி அமைச்சர் அவர்களின்

சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.

சமூக நீதித்துறை, அரசு செயலாளர் அவர்களின்

தனிச் செயலர், சென்னை-600 009.

சமூக நீதித் (ஆதிந5/அநமு-1/ஆதிந-6) துறை, சென்னை – 600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28-8-2020

பிரிவு அலுவலர்.

28.8.2020